Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 325 of 2017**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.16**

Defence

Court

| | |
|---|---|
| Name | **சங்கர்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

**1,2,3,7,9,11,1,19,20,22 வழக்கு பிரிக்கப்பட்டது. 8, 12 முதல் 15, 21 எதிரி ஆஜர்,. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் பண்ருட்டி தாலுக்கா, வரிஞ்சிப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பவம் என்ன என்று எனக்கு தெரியாது. நான் அந்த சமயத்தில் வாகனம் பழுதுபார்க்கும் பண்ருட்டியில் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள workshop ல் வேலை செய்துக்கொண்டிருந்தேன். அப்போது போலிசார் என்னிடம் அவர்கள் வாகனங்களை பழுதுபார்க்க விடும் போது என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொள்வார்கள். காண்பிக்கப்பட்ட எதிரி ஜெயசங்கர் என்பவரின் ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அவ்வாறு போட்டது தான்., **அந்த கையொப்பம் மட்டும் அதசாஆ 2 ஆகும்.** அது போல் 05.12.2001 தேதியிட்ட காலணி போகும் ரோட்டில் உள்ள கரும்பு தோட்டம் அருகே பிளாஸ்டிக் கேன்கள் விஷசாராயம் உடன் கைப்பற்றப்பட்ட **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அதசாஆ 3 ஆகும்.**

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**

கடந்த 05.12.2001 அன்று நானும் நண்பர் குமாரும் பண்ருட்டி பேருந்து நிறுத்தம் சென்றதாகவும் அங்கு காடாம்புலியூர் காவல் நிலைய ஆய்வாளர் சாராய வழக்கு சம்பந்தமாக ஜெயசங்கர் என்கிற சங்கர் என்பவரை பிடித்து விசாரணை செய்துக்கொண்டிருந்ததாகவும் அவர் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம்

அளித்ததாகவும் அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஜெயசங்கர் அழைத்து சென்று கரும்பு தோட்டத்தில் தான் மறைத்து வைத்திருந்த பிளாஸ்டிக் கேன்களையும் 60 Ml விஷசாராயத்தையும் ஒரு குவாட்டர் பாட்டிலில் மகஜரில் கைப்பற்றியதையும் நேரில் இருந்து பார்த்தாகவும் ஒப்புதல்வாக்குமூலத்திலும் அதில் நான் 2 வது சாட்சியாக கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

குறுக்குவிசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*
*read over and interpreted to the*
*Witness. Admitted and acknowledged*
*by him / her to be Correct*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 325 of 2017**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.17**

Defence

Court

| | |
|---|---|
| Name | **வீரராவ்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

**1,2,3,7,9,11,1,19,20,22 வழக்கு பிரிக்கப்பட்டது. 8, 12 முதல் 15, 21 எதிரி ஆஜர்,. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்று விட்டேன். காண்பிக்கப்பட்ட எதிரிகள் சுப்பிரமணியன், முருகன் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல்வாக்குமூலங்கள் மற்றும் 06.12.2001 தேதியிட்ட மாலை 4, 5.30 மற்றும் 6.30 மணியளவில் தயார் செய்யப்பட்ட **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது., அவை அதசாஆ 4 முதல் 9 ஆகும்.** வேறு எந்த விவரமும் எனக்கு ஞாபகம் இல்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**

கடந்த 06.12.2001 அன்று மதியம் 12.00 மணியளவில் நானும் எனது உதவியாளர் ருத்ரன் என்பவரும் கடலூர் பேருந்து நிலையம் அருகே நின்றுக்கொண்டிருந்ததாகவும் அப்போது காடாம்புலியூர் காவல் ஆய்வாளர் சாராய வழக்கு சம்பந்தமாக வாத்துக்காரன் முருகன் என்கிற முருகன் என்பவரையும் வாலு என்கிற சுப்பிரமணியன் என்பவரையும் மற்றொரு தட்சிணாமூர்த்தி மகன் சுப்பிரமணியன் என்பவரையும் கைது செய்து இருப்பதாகவும் அவர்கள் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் முறையே மதியம் 12.00 , 2.00, 4.00 மணியளவில் மேற்படி 3 நபர்களின் வாக்குமூலத்தை எங்கள் முன்பு

ஆய்வாளர் பதிவு செய்ததாகவும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும் அவர்கள் சொன்ன தகவல்ப்படி அவர்கள் கூறிய இடத்தில் இருந்து 3 மோட்டார் சைக்கிள் மற்றும் சாராய கேன்கள் கைப்பற்றியதாகவும் அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும் தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கு சம்பந்தமாக எதுவும் நினைவு இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

இல்லை என வழக்கறிஞர் கூறுகிறார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 325 of 2017**

Deposition of ....... witness for ..................  Prosecution........**P.W.18**

Defence

Court

| | |
|---|---|
| Name | **சீனுவாசன்** |
| Father name | **பரமாத்மா** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

**1,2,3,7,9,11,1,19,20,22 வழக்கு பிரிக்கப்பட்டது. 8, 12 முதல் 15, 21 எதிரி ஆஜர்,. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் பண்ருட்டி தாலுக்கா, பலாப்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளில் ஏழுமலை, விஸ்வநாதன் என்பவரை மட்டும் எனக்கு தெரியும். இந்த வழக்கு அ.சா. 12 முருகனை தெரியும்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**:

கடந்த 27.11.2001 அன்று காலை 10 மணிக்கு வயலுக்கு சென்றதாகவும் அப்போது அங்கு DL 8C 1113 என்ற எண்ணுடைய Brown நிற கார் ஏரிக்கரையில் வந்த நின்றது எனவும் அதை பார்த்தவுடன் எதிரிகள் சாமிதுரை, சீனிவாசன், தங்கதுரை ஆகியோர் அங்கு வந்தார்கள் எனவும் அப்போது காரில் இருந்து எதிரி வாலுசுப்பிரமணி மற்றும் டிரைவர்கள் ரவிச்சந்தரன் மற்றும் சண்முகம் இறங்கினார்கள் எனவும் பிறகு PY 01 P 8910 என்று கவாசாகி மோட்டார் சைக்கிளில் காக்க மண்டை என்கிற சுப்பிரமணியன் சக்திவேல் ஆகியரார் வந்ததாகவும் காரில் இருந்து 35 லிட்டர் பிடிக்க கூடிய 4 கேன்களும் ஏழுமலை விஷ்வநாதன், தேவந்திரன், ராமசந்திரன் இறக்கி வைத்தாகவும் எதிரி அருள் காரையும் கேன்களையும் காவல் பார்த்துகொண்டதாகவும் கேன்களை இறக்கியவுடன் கார் போய்விட்டதாகவும் வாலு சுப்பிரமணியன் கேட்ட போது பம்பாயில் இருந்து சென்னைக்கு மெத்தனால் பச்சை சாராயம் சக்திவேல் வாங்கி வந்ததாகவும் சொன்னதாகவும் இறக்கிய கேன்களில் 20 லிட்டர் கேனை 3 கேன்களை வாலு சுப்பிரமணியன் மடியில் வைத்து மொட்ட காளை வீட்டு பக்கம் போனதாகவும் அப்போது இரவு சுமார் 10.30 மணி இருக்கும்

என்றும் பலாப்பட்டு பவுனம்பாள் நத்தம் வில்லுக்கட்டி என்கிற கேசவன், சங்கர், மாடசாமி, ஆதிலட்சுமி என்கிற சின்னபொன்னு, மொட்டகாளை, ஆணந்தாயி, இன்னொரு சின்னபொன்னு ஆகியார் ரொம்ப நாட்களாக சாராயம் விற்றுக்கொண்டு இருப்பதாகவும் அவர்களுக்கு சாராயத்தை சக்திவேல் மூலம் வாத்து முருகன், வாலு சுப்பிரமணியன் ஆகியோர் வாங்கி சப்ளை செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

இல்லை என வழக்கறிஞர் கூறுகிறார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*